# தேவகோட்டை நகராட்சி.

## அவசரக்கூட்டம்.

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற அவசரக்கூட்டம் 24.01.2023–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு அவசரக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. தாங்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

K. Sundaralingam

நகர்மன்ற தலைவர்,
தேவகோட்டை நகர்மன்றம்.

24/1/23

**பொருள் – 191**

தேவகோட்டை நகராட்சி 27 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவகோட்டை நகரில் உருவாகும் குப்பையின் அளவு நாள் ஒன்றுக்கு 17.85 TPD ஆகும். ஒரு டன் குப்பையினை சேகரிப்பதற்கு ரூ.5237.97 /– வருடம் ஒன்றிற்கு மொத்த செலவுத்தொகை GST 18 % மற்றும் LWF 1 % உட்பட ரூ. 403.94 லட்சத்திற்கு தீர்மானம் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதையடுத்து தேவகோட்டை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்தப்பணியினை ஒரு வருட கால்த்திற்கு மேற்கொள்வதற்கும், ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ளும் நிறுவனத்தின் செயல்திறன் திருப்தியாக இருப்பின் மன்ற அனுமதி பெற்று இரண்டாவது வருடம் மற்றும் மூன்றாவது வருடம் பணிநீட்டிப்பு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1)மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.
**ந.க. எண்.0105/2023/எச்1**

**பொருள் – 192**

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு வீடு வீடாக சென்று குப்பைகள் வாங்குவதற்கு தற்போது உள்ள மூன்று சக்கர வாகனங்கள் (Try cycle) பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் பொது சுகாதாரப்பணிகள் பாதிக்காத வண்ணம் புதிதாக 17 மூன்று சக்கர வாகனங்கள் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,80,000/–த்தினை செலவு மேற்கொள்ளவும் மன்ற அனும்தி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்காணும் பணிக்கு குறைவான விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண்.2755/2018/எச்1**

## பொருள் – 193

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் தூய்மை இந்தியா திட்டத்தின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் **2018–2019**–ன் கீழ் இந்நகராட்சியில் **26** மின்கல வாகனங்கள் வாங்கி அதன் மூலம் இந்நகரில் உள்ள வீடுகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் குப்பைகளை மக்கும் குப்பையாகவும், மக்காத குப்பையாகவும் தரம் பிரித்து சேகரிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் தற்போது **5** BOV வாகனங்கள் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இதனால் குப்பைகளை தரம் பிரித்து பெறும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் பொதுசுகாதாரப் பணிகள் மிகவும் பாதிப்படைகின்றன. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிவகங்கை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளவாறு. இந்நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் தொய்வின்றி நடைபெற பழுதடைந்த வாகனங்களில் 5 BOV வாகனங்களின் பழுதுகளை சரிசெய்ய இந்நகர்மன்ற தீர்மான எண். 179, நாள் 10.01.2023–ன்படி இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு அதில் மிக குறைந்த விலைப்புள்ளியான ஈஸ்வரி எண்டர்பிரைசஸ், தேவகோட்டை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4238/2021/எச்1**

## பொருள் – 194

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் கீழ் 27 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்ட சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக போதுமான நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி நிறுவனத்தின் மூலம் 115 தூய்மை பணியாளர்களைக் கொண்டு பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேற்படி பணியானது பொது சுகாதார அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று பணி நீடிப்பு செய்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்திற்கு

வழங்க பெற்ற பணி நீட்டிப்பு காலம் வருகின்ற **31.01.2023** அன்றுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

அதன்பேரில் இந்நகர் பகுதிகளில் பொது சுகாதாரப் பணிகள் புதிய ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுரையின்படி, நிர்வாக அனுமதி பெறும் பொருட்டு புதிய பிரேரணை தயார் செய்து, 25.07.2022ந், தேதி நகராட்சி நிர்வாக இயக்குநர்–சென்னை அவர்களுக்கு அனுப்பபட்டுள்ளது. துப்புரவு ஆய்வாளரின் குறிப்பின்படி, நிர்வாக அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்பணிகள் தொடங்கும் வரையில் பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதியும், பணியின் அவசர அவசியம் கருதியும், மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை காரைக்குடி நிறுவனத்திற்கு தற்போது உள்ள ஒப்பந்த விதிமுறைகளின் படியும் **01.02.2023** முதல் **31.03.2023** வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்தும், பணிமேற்கொள்ள அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.36,00,000/– (முப்பத்தி ஆறு இலட்சம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

<u>**பொருள் – 195**</u>

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் 30 தூய்மை பணியாளர்களைக் கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி நிறுவனத்தின் பணிக்காலம் **31.01.2023**–ந் தேதியுடன் முடிவடையும் நிலையில் உள்ளது.

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்களின் அறிவுரையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி புதிய பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. அதன்பேரில் நிர்வாக அனுமதி பெறும் வரையில் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டு மதுரை மீனாட்சி திடக்கழிவு மேலாண்மை – காரைக்குடி நிறுவனத்தின் மூலம் பொதுசுகாதாரப் பணிகள் பாதிக்கா வண்ணம் செயல்படவும் மேற்படி நிறுவனத்திற்கு துப்பரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படியும், ஆணையாளர் அவர்களின் அனுமதியின்படியும் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.02.2023 முதல் 31.03.2023 வரை பணி நீடிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.8,00,000/– (எட்டு இலட்சம்)–த்திற்கு செலவு மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிக்காகும் செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளமன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 196**

தேவகோட்டை நகராட்சி பொதுப்பிரிவு பயன்பாட்டிற்கு பீரோ,டேபிள்,மற்றும் நாற்காலிகள் தேவைப்படுவதால் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.1,50,000/– (ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு, மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**ந.க. எண்.0671/2022/இ1**

**பொருள் – 197**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17 சிலம்பனி தெற்கு தெருவில் நகரின் பிரதான குளக்கால் செல்கிறது. அது கடைகள் அமைந்துள்ள பகுதியில் அடியில் செல்வதால் மழைகாலங்களில் நீர் தேங்கி செல்ல வழியில்லாமல் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளதால், அதனை முன்புறம் வடிகால் கட்டியும், தியாகிகள் சாலையில் சிறுபாலம் அமைத்தும் சரிசெய்ய ஆகும் மதிப்பீடு ரூ.9,90,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்ற அனுமதிக்கு

அலுவலக குறிப்பு:–

குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 198**

தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20ல் காந்தி ரோடு – பழைய சருகணி ரோடு சந்திப்பு உள்ளது. இப்பகுதி சற்று மேடான பகுதியாக இருப்பதால் நீரழுத்த குறைவு காரணமாக இப்பகுதிக்கு முழுமையாக கிடைக்கப்பெறுவதில் சிரமம் உள்ளது. எனவே இப்பகுதிகளில் சிறிது குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது. எனவே மேற்கானும் சந்திப்பு அருகில் புதிதாக ஆழ்துளைக்குழாய் கிணறு அமைத்து குடிநீர் தொட்டி அமைக்க நகர்மன்ற தலைவர் பொறியாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்கள். எனவே காந்தி ரோடு – பழைய சருகணி சந்திப்பு பகுதியில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு அமைத்து குடிநீர் தொட்டியுடன் குடிநீர் வசதி செய்து தர ரூ.4,00,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கு

அலுவலக குறிப்பு:–

குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>பொருள் – 199</u>**

தேவகோட்டை நகராட்சியில் **2022 – 2023**ம் நிதியாண்டில் நடைபெற்ற பல்வேறு திட்ட பணிகளை மாலைமலர் நாளிதழில் விளம்பரமாக வெளியிட்டதற்கு மாலைமலர் நாளிதழின் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது அதன் விபரம் பின் வருமாறு.

| வ. எண். | விளம்பர நிறுவனத்தின் பெயர் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|
| 1. | மலர் பப்ளிகேஷன்ஸ் லிமிடெட் | MDU<br>0289 Dt.31.08.2022 | **30,189/–** |
| | **மொத்தம்** | | **30,189/–** |

மேற்காணும் விபரப்படி விளம்பரம் வெளியிட்டதற்கு மாலைமலர் நாளிதழ் நிறுவனத்திலிருந்து வரப்பெற்ற செலவீனப்பட்டியல் தொகை மொத்தம் ரூ.30,189/– க்கு செலவீனம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்காணும் செலவீனத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

K. Sundaralingam

**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**

22/11/23